<u>முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு</u>

<u>O.S.No. 64/2016</u>

2026 ஆம் வருடம் மார்ச் ஏப்ரல் 7 ம் தேதியன்று **PW.3** ஆக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7 ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : G.ஞானசம்பந்தன் --- | | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

<u>**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**</u>

<u>**முதல் விசாரணை :**</u>

**நான் சென்னை தடய அறிவியல் துறையில் உதவி இயக்குநர் மற்றும் ஆவண நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் ஆவண நிபுணராக ஆவதற்கு எனது துறையில் பயிற்சி எடுத்துள்ளேன். மேலும் தமிழ்நாடு அரசு என்னை பெலாரஸ் நாட்டிற்கு அனுப்பி வைத்து சிறப்பு பயிற்சியும் எடுத்துள்ளேன். மேலும் National institute of criminalogy** மற்றும் **forensic science புதுடெல்லியிலும் பயிற்சி எடுத்துள்ளேன். கடந்த 11.8.2025 அன்று முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி ஈரோடு அவர்களின் வேண்டுகோள் கடிதம் எண்.11515/25 நாள் 17.12.2025 மூடி முத்திரையிடப்பட்ட உறையில் செல்வி பூங்கோதை நீதிபதி நீதிமன்ற ஆணையர் மூலம் கீழ்கண்ட ஆவணங்கள் பெறப்பட்டன. சர்ச்சைக்குரிய யூனியன் பாங்க் ஆப் இந்தியா காசோலைகள் 155868 மற்றும் 155869 நாள் 3.10.2015 இதில் உள்ள சர்ச்சைக்குரிய கையொப்பங்களை உட்பாய்வு மேற்கொள்வதற்கு திரு.வி.ஈஸ்வரமூர்த்தி என்பவரின் ஒத்துகொள்ளப்பட்ட யூனியன் பாங்க் ஆப் இந்தியா அக்கவுண்ட் ஓபனிங் பார்ம் நாள் 18.11.2009 ஆகியவை**

ஆய்விற்காக பெறப்பட்டன. சர்ச்சைக்குரிய கையொப்பங்களை **Q**1 **and Q**2 என்று குறியீடு செய்தேன். வழங்கப்பட்ட மற்றும் ஏற்றுகொள்ளப்பட்ட திரு. ஈஸ்வரமூர்த்தியின் கையொப்பங்களுக்கு **A**1 முதல் **A**9 வரை குறியீடு செய்தேன். கையொப்பங்கள் பெரியதாக புகைப்படம் எடுத்தும் மற்றும் **VSC** கருவியின் மூலமாகவும் ஆய்வு செய்யப்பட்டன. ஆய்வின் முடிவில் வந்த கருத்தையும் அதற்கான காரணத்தையும் அறிக்கையாக தயார் செய்து அறிக்கை நாள் 27.11.2025 ஆகவும் பதிவு செய்யப்பட்டது. ஆய்வின் முடிவில் **A**1 முதல் **A**9 எழுதிய வி.ஈஸ்வரமூர்த்தி சர்ச்சைக்குரிய கையொப்பமான **Q**1 மற்றும் **Q**2 கையொப்பங்களையும் எழுதியுள்ளார் என்று கருத்துரையும் அதற்கான காரணத்தாலும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் அறிக்கை சாசாஆ 3.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை என்பதால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)